**செய்தி வெளியீட்டு எண்: 58 /2022** **நாள்:26.08.2022**

**<u>தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்</u>**

**<u>செய்தி வெளியீடு</u>**

ஒருங்கிணைந்த பொறியியல் சார்நிலைப் பணிகளில் அடங்கிய பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்யும் பொருட்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், 05.03.2021 நாளிட்ட அறிவிக்கை எண்: 06/2021 - ன் வாயிலாக விண்ணப்பங்களைக் கோரியிருந்தது. இப்பதவிக்கான எழுத்துத்தேர்வு கடந்த 18.09.2021 மு.ப மற்றும் பி.ப. அன்று நடைபெற்று, எழுத்துத்தேர்வில் விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண் விவரங்கள் 15.02.2022 அன்று தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டது .

மீன்வளத்துறையில் இளநிலை பொறியாளர் தெரிவு தொடர்பான மூன்றாம் கட்ட மூலச் சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு சென்னை-600 003, தேர்வாணைய சாலையில் (பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் கோட்டை ரயில் நிலையம் அருகில்) உள்ள தேர்வாணைய அலுவலகத்தில் **05.09.2022** அன்று நடைபெற உள்ளது.

மேற்படி மூலச் சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களின் மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை எண், இடஒதுக்கீட்டு விதி மற்றும் காலிப்பணியிடங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட தற்காலிகப் பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மூலச் சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கான தேதி, நேரம் மற்றும் விவரங்கள் அடங்கிய "அழைப்புக்கடிதத்தினை விண்ணப்பதாரர்கள் தேர்வாணைய இணையதளமான **<u>www.tnpsc.gov.in</u>** - லிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். கலந்தாய்விற்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு அதற்கான விவரம் SMS மற்றும் E-mail மூலம் தெரிவிக்கப்படும். மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கான அழைப்பாணை தனியே தபால் மூலம் அனுப்பப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு பங்கேற்க அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் எழுத்துத்தேர்வில் அவரவர் பெற்ற மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை / இடஒதுக்கீட்டு விதிகள் / விண்ணப்பத்தில் அளித்துள்ள தகவல்கள் மற்றும் காலிப்பணியிடங்களுக்கு ஏற்ப கலந்தாய்விற்கு அனுமதிக்கப்படுவர். எனவே, அழைக்கப்படும் அனைவரும் கலந்தாய்விற்கு அனுமதிக்கப்பட்டு பணி நியமனம் வழங்கப்படும் என்பதற்கான உறுதி அளிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விண்ணப்பதாரர்கள் மேற்படி மூலச் சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு வர தவறினால் அவர்களுக்கு மறுவாய்ப்பு அளிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

திருமதி. பி. உமாமகேஸ்வரி, இ.ஆ.ப.,
செயலாளர்.

Press Release No:58/2022 Date:26.08.2022

# TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

## Press Release

The Tamil Nadu Public Service Commission in its Notification No.06/2021 dated 05.03.2021 had invited applications for selection of candidates for appointment by direct recruitment to the Posts included in Combined Engineering Subordinate Services Examination. The Written examination was held on 18.09.2021 FN & AN. and results published on 15.02.2022. In order to verify the genuineness of claim of the candidates made in their on-line applications regarding age, qualification, community etc. and to fill up the vacancy for the said post. The Original Certificate Verification cum Counselling for the post of Junior Engineer in Fisheries Department is scheduled to be held on **05.09.2022 (Phase-III)** at the O/o. Tamil Nadu Public Service Commission, TNPSC Road, (Near Broadway Bus Stand and Fort Railway Station) Chennai – 600 003.

The list of candidates who have been provisionally admitted for the Original Certificate Verification cum Counselling have been shortlisted based on merit, overall rank, Rule of Reservation of appointments and number of vacancies and the same have been hosted in the Commission's Website. The candidates should bring all essential original certificates as per the claim made in their On-line application. Candidates are hereby informed to download the Memorandum of Admission to Certificate Verification cum Counselling through the Commission's Web-site viz www.tnpsc.gov.in and also directed to attend the Original Certificate Verification cum Counselling on the scheduled date / time without fail. The candidates are also informed through SMS and Email. Memorandum of Admission to Certificate Verification cum Counselling to the candidate will not be sent by post.

The allotment to the post is strictly subject to availability of vacancies in their respective reservation categories when they reach their turn as per their rank, rule of reservation and subject to their eligibility. Therefore the candidates called for Original Certificate Verification are not assured of being admitted to Counselling.

Candidates who do not appear for Original Certificate Verification cum Counselling on the scheduled date and time allotted to them will lose their opportunity in the combined merit list and they will not be given any further chance to appear for the same.

Tmt.P.Uma Maheswari, I.A.S.,
Secretary.